www.tamilarangam.net

ஈழச்செய்தி
EPIC

செப்ரெம்பர் - 1990 வெளியீடு - 14

# யுத்தத்தை நிறுத்த, அரசியல் தீர்வுகாண ஆளும்எதிர்கட்சிகள் இணையவேண்டும்

## வன்னி மாவட்ட எம். பி. சபையில் அழைப்பு!

## வட-கிழக்கில் கொலைகள் குறையவில்லை என்கிறார்

(எம்.பி.எம். அஸ்ஹர், வீ. தனபாலசிங்கம்)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இதுவரை 2500க்கு மேற்பட்ட அப்பாவி மக்கள் ஆயுதப் படைகளால் கொலை செய்யப்பட்டுள்ளனர். ஆறு இலட்சத்துக்கு கூடுதலான மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். நூற்றுக்கணக்கான கடைகள், வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்த பின்னரும்கூட கொலைகள் குறையவில்லை என வன்னி மாவட்ட எம். பி. கே. ஆர். குகனேஸ்வரன் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இன்று நடைபெறும்யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல; புலிகளுக்கு எதிரானதே என்று ஜனாதிபதியும் அமைச்சர்களும் ஆளுங்கட்சி உறுப்பினர்களும் கூறி வந்தாலும் இன்று வட-கிழக்கில் என்ன நடைபெறுகிறது என்பதை கூற வேண்டியது தனது கடமை எனவும் அவர் தனது நீண்ட உரையில் குறிப்பிட்டார்.

அவசரகால்ச் சட்ட நீடிப்பு விவாதத்தில் உரையாற்றிய ஈ. பி. ஆர். எல். எவ். வைச் சேர்ந்த குகனேஸ்வரன் எம். பி. தொடர்ந்து கூறியதாவது:

ஆயுதப்படைகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை காட்டுவதற்கு ஒரு சில உதாரணங்களை மட்டும் இங்கு குறிப்பிடுகின்றேன்.

17-7-90 அன்று இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய மட்டக்களப்பு லேக் வீதியில் 27 இளைஞர்கள் ரயர் போட்டு எரிக்கப்பட்டுள்ளனர்.

கோட்டைக் கல்லாறு சுற்றி வளைப்பின்போது ஏராளமானோர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

21-6-90இல் காரைதீவில் குடும்பஸ்தர்களான 14பேர் ஒரே வீட்டில் போட்டு எரிக்கப்பட்டுள்ளனர். இவை தவிர, கல்முனை பாபுஜி கடையிலும் நிந்தாவூர்இந்து கோயிலிலும் நிந்தாவூர் கடற்கரையிலும், வளத்தாப்பிட்டியிலும் பல்வேறுபட்ட தடவைகளில் அறுநூறுக்கும் மேற்பட்டோர் சுட்டுக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டுள்ளனர்.

### அகதிகள் தொகை

அகதிகளை எடுத்துக் கொண்டால் யாழ்ப்பாணத்தில் 344 முகாம்களில் 68,000 குடும்பங்களைக் கொண்ட 2,92,000 பேரும், வவுனியாவில் 25 முகாம்களில் 10,000 குடும்பங்களைக் கொண்ட 50,000 பேரும், முல்லைத்தீவில் 24 முகாம்களில் 10,000 குடும்பங்களைக் கொண்ட 50,000 பேரும், மன்னாரில் 42 முகாம்களில் 15,000 குடும்பங்களைக் கொண்ட 65,000 பேரும், மட்டக்களப்பில் 45 முகாம்களில் 5,000 குடும்பங்களைக் கொண்ட 25,000 பேரும், திருகோணமலையில் 30 முகாம்களில் 33,275 குடும்பங்களைக் கொண்ட 1,07,920 பேரும், பொலன்னறுவையில் 4 முகாம்களில் 120 குடும்பங்களைக் கொண்ட 600 பேரும், அம்பாறையில் 21 முகாம்களில் 8254 குடும்பங்களைக் கொண்ட 40,000 பேரும், மொனராகலையில் 2 முகாம்களில் 120 குடும்பங்களைக் கொண்ட 600 பேரும், அனுராதபுரத்தில் 24 முகாம்களில் 2100 குடும்பங்களைக் கொண்ட 10,300 பேருமாக மொத்தம் 6,43,120 மக்கள் அகதிகளாக வாழ்கின்றனர்.

யூன் மாதம் 11 ஆம் திகதியிலிருந்து யூலைமாதம் 11ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலமான 1மாதத்துக்குள் இத்தனை லட்சம் பேர் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

இவை தவிர, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் கல்லூரி, யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள நூற்றுக்கணக்கான கடைகள் பிரதான வீதியிலுள்ள நூற்றுக்கணக்கான கடைகளும் வீடுகளும், முதலாம், இரண்டாம், மூன்றாம் குறுக்குத்தெருவிலுள்ள வீடுகள், குருநகர், கொட்டடி, பொம்மைவெளி, போன்ற இடங்களில் இருக்கக் கூடிய நூற்றுக்கணக்கான வீடுகள் கஸ்தூரியார் வீதியிலுள்ள நூற்றுக்கணக்கான கடைகள் போன்றவையும், பலாலி, மயிலிட்டி, வசாவிளான், காங்கேசன்துறை போன்ற இடங்களில் இருக்கக் கூடிய வீடுகளும் கடைகளும் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

### கடைகள், வீடுகள் எரிப்பு

மூதூர் கட்டை பறிச்சானில் நூற்றுக்கணக்கான வீடுகளும் திருமலை நகரில் தமிழ் மக்களுக்கு உரித்தான பல வீடுகளும் கடைகளும் முற்றாக எரிக்கப்பட்டுள்ளன.

காரைதீவு, கல்முனை, பொத்துவில், அக்கரைப்பற்று போன்ற இடங்களில் தமிழர்களுக்கு சொந்தமான பல கடைகள் எரிக்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்டவை இந்த அரசாங்கத்தின் மேல் குற்றம் சுமத்த வேண்டும் என்பதற்காக நாம் மிகைப்படுத்தி கூறியவை அல்ல. எங்களுக்கு கிடைத்த, சொன்ன தகவல்களின் அடிப்படையிலேயே மேற்கண்ட விடயங்களை சுட்டிக் காட்டியுள்ளோம்.

உண்மையில் இது தமிழ் மக்களுக்கு எதிரான போராட்டமா? அல்லது புலிகளுக்கு எதிரான போராட்டமா? என அரசாங்கம் மீண்டும் ஒருமுறை சிந்தித்துப் பார்க்க வேண்டும். புலிகளுக்கு எதிராக யுத்தம் புரிகிறோம் என்ற பெயரில் அப்பாவி மக்கள் கொலை செய்யப்படுவதையும், அநியாயமான அழிப்புக்களையும் நாம் வெறுமனே பார்த்துக் கொண்டு இருக்க முடியாது. நாம் ஜனாதிபதிக்கும் இந்த சபைக்கும் மீண்டும் மீண்டும் கூறுவது : என்னவென்றால், உங்களது இந் நடவடிக்கைகளானது தமிழ் மக்களை மேலும், மேலும் புலிகளின் பக்கம் திருப்புமேயல்லாமல் நிச்சயமாக அரசாங்கத்து

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

...க்கு ஆதரவு தரமாட்டார்கள். கொல்லப்படுவது தமிழ் மக்கள்

இந்த அரசாங்கத்தால் பலப்படுத்தப்பட்ட புலிகளை அழிப்பதற்கு மேலும் 500 கோடி ருபாய்களுக்கு இவ்வரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து ஆயுதக் கொள்வனவில் ஈடுபட்டுள்ளது. ஆனால் இதனால் பாதிக்கப்படுவதும் கொலை செய்யப்படுவதும் அப்பாவி தமிழ் மக்களே!

ஒரு யுத்தத்தின் மூலம் சமாதானத்தை அடைந்த விட முடியாது. இன்று நடக்கும் யுத்தத்தில் நிச்சயமாக இரு தரப்பினரும் வெல்லப்போவது கிடையாது. இவ் யுத்தம் வருடக் கணக்காக நீடிக்கும் ஒரு யுத்தமாகவே எமக்கு தோன்றுகிறது. எனவே இந்த நாட்டில் அமைதியையும் ஜனநாயகத்தையும் உருவாக்குவதற்கான முயற்சியில் ஆளும்கட்சி, எதிர்க்கட்சிகள் என்ற வேறுபாடின்றி சகலரும் இணைந்து செயற்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். யுத்தத்தை நிறுத்துவதற்கும் அரசியல் தீர்வு ஒன்றை காண்பதற்காகவும் மாத்திரமே சகலரும் இணைத்து செயற்பட வேண்டும் என கூறுகின்றோம்.

இந்த் சபைவெறுமனே விவாதங்களை நடத்துவதற்கான ஒரு சபையாக அல்லாமல் நாட்டு மக்களையும் நாட்டு நிருவாகத்தையும் சரியான வழியில் கொண்டு செல்வதற்கான ஒரு சபையாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம். அதனடிப்படையில் இன்று நமது நாடு எதிர்நோக்கியிருக்கும் தமிழ் தேசிய இனப் பிரச்சினைக்கு இச்சபை நீர்க்கமானதும் நியாயமானதுமான ஓர் தீர்வை காண வேண்டும் என்று வற்புறுத்துகிறேன்.

# 'யாழ். மக்கள் மெழுகுதிரியையாவது பயன்படுத்த அனுமதிக்க வேண்டும்!

## பிரேமச்சந்திரன் எம். பி.

செப். 19

யாழ்ப்பாணத்திலே மின்சாரம் இல்லை. பெட்ரோல் இல்லை. மண்ணெண்ணெய் இல்லை. மக்கள் வெளிச்சம் காண்பதற்கான எந்த வாய்ப்புமே இல்லை. ஜொனி வெடியாரிப்பதற்கு மெழுகுதிரி பயன்படுத்தப்படுவதாகக் கூறி மெழுகுதிரியைக் கூட யாழ். மக்கள் எடுத்துச் செல்வதை இராணுவத்தினர் தடுக்கிறார்கள். நெருப்புப் பெட்டி எடுத்துச் செல்லக் கூட அனுமதியில்லை.

யாழ்ப்பாண மக்கள் உணவு அருந்தும் போதாவது வெளிச்சத்தைக் காண மெழுகுதிரியையாவது கொளுத்த அரசாங்கம் வகை செய்ய வேண்டும்.

யாழ். மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. கே. பிரேமச்சந்திரன் நேற்றுக் (வியாழக்கிழமை) காலை பாராளுமன்றத்தில் இவ்வாறு உருக்கமாக கோரிக்கை விடுத்தார்.

அவசரகால சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய பிரேமச்சந்திரன் புலிகள் 6 மாத காலத்துக்கு தங்களை காத்துக் கொள்வதற்கான சகல வசதிகளையும் கொண்டிருக்கிறார்கள்.

வேதாரண்யம், இராமேஸ்வரத்தில் இருந்து அதி வேக இயந்திரப் படகுகள் மூலம் தங்களுக்குத் தேவையான பெட்ரோல், மண்ணெண்ணெய் மற்றும் பொருட்களை தாராளமாக கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு அந்த வல்லமை உள்ளது. ஆனால், அரசாங்கம் எடுக்கும் சகல நடவடிக்கைகளாலும் பொது மக்களே வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் சுட்டிக் காட்டினார்.

கடந்த மாதம் 5–6 இலட்சமாக இருந்த வடக்கு– கிழக்கு அகதிகள் எண்ணிக்கை இப்போது 10 இலட்சத்துக்கும் அதிகமாகிவிட்டது. ஜூன் ஜூலை மாதங்களில் அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்ற படுகொலைகள் குறித்து நாம் அரசுக்கு பல தடவைகள் சுட்டிகாட்டியும், நிலைமையில் மாற்றமில்லை. இவ்வாறு தமதுரையில் அவர் மேலும் குறிப்பிட்டிருக்கிறார்.

# 'இந்தியாவுக்கு மீண்டும் ஓடும் நிலை உருவாகியுள்ளது'

## சபையில் மாவை சேனாதிராஜா

(நமது சபை நிருபர்கள்)

"புலிகளுக்கு எதிரான போர் என்ற பெயரிலே இன்று தமிழ் மக்கள் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் ஆயிரக்கணக்கில் தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள்" என தமிழர் விடுதலை கூட்டணி எம். பி. மாவை சேனாதிராஜா நேற்று பாராளுமன்றத்தில் கவலை தெரிவித்தார்.

அவசரகால சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய சேனாதிராஜா "எத்தனை ஆண்டுகளாக எமது தமிழ் மக்கள் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அரசாங்கம் உணர்ந்துகொள்ள வேண்டும். மீண்டும் இந்திய மண்ணை நோக்கி தமிழ் மக்கள் ஓடும் நிலை உருவாகியிருக்கிறது" என்றும் சுட்டிக்காட்டினார்.

அவர் தமதுரையில் மேலும் கூறியதாவது:-

இந்தப்போர் இப்போதைக்கு முடிவுக்கு வரும் போல் தோன்றவில்லை. இது நீடிக்குமானால், எமது மக்கள் எவ்வளவு காலத்துக்குத்தான் மருந்தில்லாமல், உணவில்லாமல் பட்டினியால் சாவது. உடனடியாக இந்தப் போரை அரசாங்கம் நிறுத்த வேண்டும்.

வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வை ஒரு போதும் காண முடியாது. அதில் வெற்றி கிடைக்கப் போவதில்லை.

அரசு சிந்திக்க வேண்டும்

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முழுமனதுடன் அரசாங்கம் செயற்படாத காரணத்தினால்தான் மீண்டும் ஆயுதப் போராட்டம் வெடித்திருக்கிறது. போர் நிலை உருவாகியிருக்கிறது. 14 மாத காலமாக புலிகளுடன் பேசிய அரசாங்கம் தீர்வொன்றைக் காண முடியாமல் போனது ஏன் என்பதை சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கின்றது.

வடக்கு, கிழக்கிலே ஆயுதப் படைகளுக்கு எதிராக சிறு தாக்குதல் தொடுக்கப்பட்டாலும், அது நடைபெற்ற இடத்தில் வாழுகின்ற தமிழ் மக்களை அழித்தொழித்து வீடுகளையும் நிர்மூலமாக்குவது தான் இலங்கைப் படையினரின் செயலாக இருந்து வந்திருக்கிறது. இது எமது அனுபவம். இவ்வாறாகத்தான் இப்போதும் தமிழ் மக்கள் படையினரின் நடவடிக்கைகளினால், அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஐரிஷ் கெரில்லாக்கள் நீண்ட காலமாகப் போராட்டம் நடத்தி வருகிறார்கள். இங்கிலாந்துப் படைகள் மீது பல தாக்குதல்களைத் தொடுத்திருக்கிறார்கள். ஆனால், இங்கிலாந்துப் படையினர் அதற்காக ஒரு போதும் ஐரிஷ் மக்களை பழி வாங்கியதில்லை. கொலை செய்ததில்லை. என்பதை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

# அகதிகள் நிலைமையை நேரில் பார்க்க நவரத்தினம் எம். பி. கோரிக்கை

யாழ். மாவட்ட தமிழர் விடுதலை கூட்டணி எம்.பி. யான கே. நவரத்தினம் நேற்று பாராளுமன்றத்தில் கூறியதாவது:-

சூழல் பாதுகாப்பு அதிகார சபை அரசியல் நோக்குடன் செயற்படக்கூடாது. வடக்கு கிழக்கில் உள்ள அகதிமுகாமகளுக்கு சென்று நிலைமைகளை பார்வையிடவேண்டும். 600 அகதிகள் இருக்கக் கூடிய முகாமில் ஆறு ஆயிரம் அகதிகள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மூன்று இனங்களை சேர்ந்தவர்களும் அகதிகளாய்இருக்கிறார்கள். அகதிமுகாம்களில் போதிய உணவு, மருத்துவ, மலசல கூட வசதிகள் இல்லை. போஷாக்கின்மையால் குழந்தைகளுக்கும் வயோதிபர்களுக்கும் நோய் நொடிகள் பரவுகின்றன. போதிய தண்ணீர் கூட அகதிகளுக்கு கிடைப்பதாக இல்லை. பொதுமக்கள் அகதி முகாம்களுக்கு செல்வதையும் தவிர்க்கக் கூடிய சூழ்நிலைகள் உருவாக்கப்பட வேண்டும்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மனித அவலம் மடியும் நாள் என்று வரும்?

## பட்டினிச்சாவை எதிர்நோக்கும் அகதிகள்!

தொடரும் மோதல்கள் காரணமாக அகதிகளாகும் வட – கிழக்கு மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது இன்று, நாளை என்று ஒவ்வொரு ஊரைச் சேர்ந்த மக்களும் தமது உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஒன்றும் அறியா அப்பாவிப் பச்சிளம் பாலகர் சகிதம் ஓடித் திரியும் காட்சி மிகவும் வேதனைக்குரிய ஒன்றாகும்.

உணவுப் பஞ்சமானது வட – கிழக்கு பகுதிகளை மட்டும் வாட்டாது. அகதி முகாம்களையும் வாட்டி வருவது மறுபுறம் பட்டினிச் சாவுக்கே வழிவகுக்கின்றது.

உடைமைகள் அனைத்தையும் இழந்த நிலையில் வெறுமனே வானம் ஒன்றே தமது கூரையென ஒதுங்கியிருக்கும் கிழக்குப் பகுதி மக்கள் பட்டினியின் அகோரப் பிடியின் கரங்களுக்குள் சிக்கி படும் அவஸ்தைகள் குறைந்தவையல்ல.

இவர்களில் பெரும்பான்மையானவர்கள் அன்றாடம் கூலித் தொழில் செய்யும் அப்பாவி மக்களேயாகும். தொழிலும் அற்ற நிலையில், உணவும் அற்ற நிலையில் ஆங்காங்கே மரநிழல்களிலும், வீதியோரங்களிலும் இவர்கள் தமது பிள்ளைகள் சகிதம் கிடப்பது மனித நேயம் மிக்க எவராலும் சகித்துக் கொள்ள இயலாத ஒன்றாகும்.

இதனிடையே சமூக நோக்கங்களைக் கொண்ட நிறுவனங்களில் சேவை அகதி முகாம்களில் தங்கியிருப்போருக்கு கிடைக்கவே செய்கிறது. இருப்பினும் அவை போதுமான அளவு கிடைப்பதற்கும் – விநியோகிக்கப்படுவதற்கும் பல்வேறு இடையூறுகள் நிலவவே செய்கின்றன.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், செடெக், நொராட், அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயம் என்பனவற்றின் மகத்தான உதவிகளை நாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அகதிகள் விடயத்தில் அவை கால தாமதமெதனையும் மேற்கொள்ளாத உடனுக்குடன் செயல்பட்டு மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கின்றன.

இதனிடையே வட – கிழக்கின் இன்றைய மோதல்களினால் இடம் பெயர்ந்த வரும் குடிமக்களை குடியமர்த்த மன்னாரை "யுத்த சூனிய பகுதியாக பிரகடனஞ் செய்ய ஒரு மாத காலத்துக்குள் நடவடிக்கை எடுக்கப்படுமென்று செய்திகள் தெரிவிக்கின்றன.

மோதல்களினாலும், கலவரங்களினாலும், ஷெல், குண்டு வீச்சுக்களினாலும் பலியாகி வந்த மக்களை இன்று பட்டினிச் சாவும் விட்டு வைக்கவில்லை இந்நிலையில் எஞ்சியிருக்கும் எத்தனை பேருக்கு மன்னார் அடைக்கலம் அளிக்கப் போகின்றது என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

பேசாலையில் 30 ஆயிரத்துக்கும் அதிகமான அகதிகள் தஞ்சமடைந்திருப்பதாகவும் இவர்கள் உணவின்றி பட்டினி கிடப்பதாகவும் அதிலும் நால்வர் பட்டினியால் பலியானதாகவும் வெளிவந்த செய்திகள் அனைவரும் அறிந்த ஒன்றே. இதற்குப் பின்னராவது துரிதகதியில் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றால் அது மாற்றான் தாய் மனப்பான்மையுடன் நோக்கப்படுகின்றதா என்றே சந்தேகிக்க வைக்கின்றது.

சுமார் 6 லட்சம் மக்கள் வட – கிழக்கில் அகதிகளாக இருப்பதாக தெரியவருகிறது. தொடரும் மோதல்கள் அகதிகளின் எண்ணிக்கையை தான் அதிகரிக்க வைக்கின்றன.

இதன் காரணமாக அகதிகள் முகாமில் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி தொற்று நோய்களுடன் போராடி மடிய வேண்டிய பரிதாப நிலையும் தொடரவே செய்கின்றது.

இங்கு பாலுக்காக ஏங்கி அழும் குழந்தையை தேற்ற வழியின்றி பெற்றோரும், மருத்துவ வசதியின்றி துன்ப முறும் நோயாளரும் மகப்பேற்றை எதிர்நோக்கித் தவிக்கும் தாய்மாரும் வடிக்கும் கண்ணீர் சொல்லில் அடங்காதவை.

சுமுகமான நிலையிலேயே இந்தப் பிரச்சினைகள் இருக்கவே செய்தன. இன்று அடிப்படை வசதிகள் அனைத்துமே ஸ்தம்பித்த நிலையில் இப் பிரச்சினைகள் எந்தளவு பரிணமித்திருக்கும் என்பதை சற்று அனைவரும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கில் தான் அந்த உயிரையே பணயம் வைத்த தமிழ்நாட்டை நோக்கி அகதிகள் படையெடுக்கின்றனர். அங்கு சென்றாவது நிம்மதியாக வாழலாம் என்றால் இடையில் பல்வேறு துயரங்களுடன் எதிர்நீச்சலடிக்கவும் வேண்டியுள்ளது.

பல்வேறு சுயநல நோக்கங்களுக்காக, அங்கு செல்ல அவர்களை விடாமல் தடுக்க முனைவது மனித அநாகரிகமாகவே அமையும். அகதிகளாக ஓடுபவர்கள் மோதல்களை வெறுத்து எமக்கு எதுவுமே வேண்டாம் நிம்மதி ஒன்றே போதும் என்ற திடசங்கற்பத்துடனே தான் செல்கிறார்கள் என்ற உண்மையை உணர வேண்டும்.

மக்களை பகடைக்காயாக நகர்த்தி பலப்பரீட்சையை நடத்த முனைவது எச்சந்தர்ப்பத்திலும் நிரந்தர அமைதிக்கு வித்திடாதென்பது கசப்பான உண்மையாகும்.

இப்போதே நாடு பொருளாதார நெருக்கடி நிலையில் இருக்கையில் மேலும் போர் நீடிக்குமானால் படைச் செலவினங்கள், நிவாரணச் செலவினங்கள் என்று நீண்ட பட்டியலே தொடர்வதுடன், இதன் தாக்கத்தை நாட்டில் உள்ள அனைவருமே தாங்கிக் கொள்ள வேண்டிய நிலைமையுமே ஏற்படும்.

போர் நிறுத்தப்படாத வரையில் அகதிகளாக மக்கள் இடம் பெயர்வும் இருந்த கொண்டேயிருக்கும் – இவர்களை ஓரிடத்தில் அழைத்து அடைக்கலமளித்த பராமரிப்பதில் உள்ள சாத்தியத்தை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். போக்குவரத்தின்மை, இருபக்க மோதல்கள் தாக்குதல்கள் என்பவற்றுக்கு மத்தியில் தெரிவு செய்யப்படும் முகாம் ஒன்றுக்கே அகதிகளாக மக்கள் செல்வார்கள் என்று எண்ணுவது இயலாத ஒன்றாகும்.

குண்டு தாக்குதல்கள், ஷெல்லடிகள் என்பவை காரணமாக வட – கிழக்குப் பகுதியின் பெரும்பாலான கட்டிடங்கள் தகர்க்கப்பட்டும், சேதமடைந்தும் விட்டன. – இவை காரணமாக தமிழ் பேசும் மக்கள் பொருளாதார ரீதியில் மிகவும் பின்தள்ளப்படும் காலம் வெகு தொலைவில் இல்லை.

எது எவ்வாறிருப்பினும் அகதிகளை பராமரிப்பது பெரிதல்ல – மாறாக மக்களுக்கு "அகதிகள் அந்தஸ்து" வழங்காது இருப்பதே பெரிய விடயம்.

இன்று வடகிழக்கில் அத்தியாவசிய பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. குறிப்பாக கோதுமை மா, சீனி, குழந்தைகளுக்கான பால்மா, மண்ணெண்ணெய், தீப்பெட்டி என்பன பெரும் பற்றாக்குறையாகவுள்ளன. அதிலும் குழந்தைகளுக்கான பால்மா இல்லாமை பெரும் பரிதாபத்துக்குரிய விடயம்.

சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் சேவை மக்கள் மத்தியில் வெகுபாராட்டை பெற்றுள்ளதுடன் அவர்களின் தன்னலமற்ற சேவைக்கு எத்தரப்பினரது இடையூறும் இல்லை என்பதை துரிதமான அவர்களின் உணவு விநியோகச் சேவை புலப்படுத்தியுள்ளது.

எனவே தொடர்ந்தும் தட்டுப்பாடான அத்தியாவசிய சேவைகளை அனுப்பி வைப்பதில் எவ்வித சிக்கலும் இருக்க முடியாது.

குறைந்தளவு எண்ணிக்கையிலான அகதிகள் என்றால் சமூக சேவை நிறுவனங்களினால் பராமரிப்பது இலகுவாக இருக்கும். ஆனால் பாரிய அளவில் இடம் பெயர்வோருக்கு அரசின் உதவியே அவசியமாகின்றது.

எனினும் துயரங்களின் தொடர்ச்சியால் நொந்து போயிருக்கும் மக்களுக்கு எத்தரப்பினராக இருப்பினும் தம்மாலான பங்களிப்பைச் செலுத்தி அவர்களை கரைமீட்க வேண்டும் – வெறும் அறிக்கைகளும், பேச்சுக்களும் பட்டினிச் சாவை எதிர்நோக்கியிருக்கும் மக்களின் பசியாற்றப் போவதில்லை அல்லவா?

—கோபி

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## வடக்கு-கிழக்கில் கைதானோரை விடுவிக்க ஈ. பி. ஆர். எல். எவ். நடவடிக்கை

(அன்டன் எட்வேர்ட்)

வடக்கு - கிழக்கில் ஏற்பட்ட மோதலுக்குப் பின்னர் கைதானவர்களை விடுதலை செய்வதற்கும், தகவல் இல்லாதவர்களின் விபரங்களை அறிந்து உறவினர்களுக்குத் தெரியப்படுத்தவும் ஈ. பி. ஆர். எல். எப். முயற்சி மேற்கொண்டுள்ளது.

இத்தகையோரின் விபரங்களை பாதுகாப்பு அமைச்சுக்கு சமர்ப்பித்து கைதானோரை விடுவிக்க தாங்கள் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஈ. பி. ஆர். எல். எப். பாராளுமன்ற உறுப்பினர்களான ராஜ்குகனேஸ்வரன், அந்தனி இமானுவேல் சில்வா ஆகிய இருவரும் தெரிவித்தனர்.

வடக்கு - கிழக்கு மோதலின் விளைவாக கைதான அல்லது தகவல் இல்லாத மற்றும் கொல்லப்பட்டோரின் பெயர், விபரங்களை தங்களுக்கு விரைவில் அனுப்பிவைக்குமாறு பிரஜைகள் குழுவிடமும், சமாதானக் குழுவிடமும் ஈ. பி. ஆர். எல். எப். கோரியுள்ளது. இது தொடர்பாக பிரஜைகள் குழு, சமாதானக் குழு தலைவர்களுடன் அவ்வியக்கம் தொடர்பு கொண்டுள்ளது.

இந்த விபரங்களை எம். பி.க்களின் விடுதியான சிராவஸ்திக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

## தமிழகம் சென்ற அகதிகள் எண்ணிக்கை 50ஆயிரத்தை தாண்டியது

புதுடில்லி,

இலங்கையிலிருந்து தமிழகத்துக்கு அகதிகளாக வந்திருக்கும் இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை 50 ஆயிரத்தையும் தாண்டி விட்டதாக அதிகாரிகள் கூறினர்.

செவ்வாயன்று1350பேர்இராமேஸ்வரம் வந்து சேர்ந்துள்ளனர் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

தமிழகத்துக்கு இப்படி பெருமளவில் மக்கள் அகதிகளாகவந்துள்ளமை இதுவே முதற்தடவை என்றும் 1985 முதல் 1989 வரையிலான காலப் பகுதியில் 40 ஆயிரம் பேரே அகதிகளாக வந்தனர் எனவும் அதிகாரிகள் கூறினர்.

இதேவேளை, தமிழகத்திற்கு இலங்கையிலிருந்து தமிழ் மக்கள் அகதிகளாகி தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் நிலையை அரசு உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் முப்தி முஹம்மது தனது அமைச்சின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

(இந்திய வானொலி)

## அகதிகள் தமிழகம் செல்வதற்கு பட்டினிச் சாவும் ஒரு காரணம்

### உணவு அமைச்சருக்கு வாசு எம்.பி. கடிதம்

(நமது நிருபர்)

வட-கிழக்குப் பகுதிகளில் ஏறத்தாழ ஆறு இலட்சம் மக்கள் அகதி முகாம்களில் பட்டினியுடனும் சொல்லொணாத் துயரத்துடனும் வாழ்கின்றனர். தற்போது அவர்கட்கு வழங்கப்படும் உணவும் முற்று முழுதாகப் போதாமலேயே உள்ளது. தமிழ் நாட்டிற்கு அகதிகளாக அவர்கள் செல்வதற்கு இதுவும் ஒரு காரணமாக அமையலாம் என்று இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார உணவு அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

தற்போது வட-கிழக்கில் தலைவிரித்தாடும் உணவுப் பஞ்சமும் அதனால் மக்கள் படும் அவஸ்தை தொடர்பாகவும் உணவுக் கூட்டுறவுத்துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சிக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

வட-கிழக்கு மாவட்டங்களில் வழமையான காலத்தில் தேவைப்படும் அரிசி, சீனி, மா போன்ற பொருட்களை கிடைக்கச் செய்தல் வேண்டும்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உணவுப் பொருட்களை அப்பிரதேசங்களில் விநியோகிப்பதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் தயாராக இருந்தால் உணவு ஆணையாளர் லொறிகளில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அனுப்பி வைக்கவுள்ளதாக பத்திரிகைகள் குறிப்பிட்டிருந்தன. ஏற்கனவே செஞ்சிலுவைச் சங்கம் இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதை நாம் அறிகிறோம். அவ்வாறாயின் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு ஊழியர்கள் பற்றாக் குறையாக உள்ளனரா? இம் மாற்று யோசனைக்கான காரணம் என்ன?

வீதிப் போக்குவரத்துக்கு இடையூறுகள் ஏற்பட்டிருந்தால் அத்தியாவசியப்பொருட்களை கடல் மார்க்கமாகவோ அல்லது ஆகாய மார்க்கமாகவோ செஞ்சிலுவைச் சங்க மேற்பார்வையில் அம்மக்களுக்கு வழங்க வேண்டும்.

மேற்கூறிய வழிகளில் அவசரநடவடிக்கைகளை நீங்கள் எடுக்காவிடில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில்உள்ள சனத்தொகையில் ஒரு பகுதியினர் மேலும் பட்டினிச் சாவையும் அவலத்தையும் எதிர்கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

## அகதிகளுக்குதவ நவசமசமாஜ நிதிசேர்ப்பு

(நமது நிருபர்)

நவசமசமாஜக் கட்சி வடக்கு கிழக்கு போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அகதிகளான தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கும் உதவி புரியும் பொருட்டு நிதி சேர்க்க ஆரம்பித்துள்ளது.

இதில் சேர்க்கப்படும் நிதி, கால் இழந்தோர் செயற்கைக்கால் பெறவும், மற்றும் தேவைகளுக்கும் உபயோகிக்கப்படும்.

இந்நிதிக்குபணம் அனுப்பவிரும்புவர்கள் வாசுதேவ நாணயக்காரவின் பெயரில் நுகேகொட மக்கள் வங்கி நடப்பு கணக்கு இலக்கமான 1070015023 என்பதற்கு அனுப்பும்படி கேட்கப்படுகின்றனர். பெறும் பணத்துக்கு உடனுக்குடன் பற்றுச்சீட்டுக்களும் ரசீதுகள் அனுப்பப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### பிரின்ஸ் உரை

மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. பிரின்ஸ் காசிநாதர் தமதுரையில் கூறியதாவது:-

மட்டுநகரில் உள்ள எல்லா தமிழர்களையும் புலிகளாக இராணுவம் கணிக்கத் தொடங்கியுள்ளது பெரும் கவலையளிக்கிறது. மக்களின் நல்லெண்ணங்களைப் பெறாமல் அரசாங்கம் இப்போரில் வெற்றிபெற முடியாது.

மட்டக்களப்பினுள் இராணுவம் நுழையும்போது எந்தவித அசம்பாவிதங்களும் இடம் பெறவில்லை. ஆனால், பின்னர் துர்ப்பாக்கிய சம்பவங்கள் இடம்பெறத் தொடங்கின.

இன்று மட்டு நகருக்குள் மக்கு ஆதரவு தரமாட்டார்கள். புலிகளை அழிக்கின்றோம் என்ற பெயரில் புலிகளை பலப்படுத்தும் வேலைகளையே நீங்கள் செய்து வருகின்றீர்கள்.

கொல்லப்படுவது தமிழ் மக்கள்

இந்த அரசாங்கத்தால் பலப்படுத்தப்பட்ட புலிகளை அழிப்பதற்கு மேலும் 500 கோடி ரூபாய்களுக்கு இவ்வரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து ஆயுதக் கொள்வனவில் ஈடுபட்டுள்ளது.

ஆனால் இதனால் பாதிக்கப்படுவதும் கொலை செய்யப்படுவதும் அப்பாவி தமிழ் மக்களே!

ஒரு யுத்தத்தின் மூலம் சமாதானத்தை அடைந்து விட முடியாது. இன்று நடக்கும் யுத்தத்தில் நிச்சயமாக இரு தரப்பினரும் வெல்லப்போவது கிடையாது. இவ் யுத்தம் வருடக்கணக்காக நீடிக்கும் ஒரு யுத்தமாகவே எமக்கு தோன்றுகிறது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அகதிகள் பேசாலை பகுதியில் பட்டினியால் தவிப்பு

## நால்வர் உணவின்றி மரணம், பலர் பலவீனம்

வவுனியா,

பேசாலை, விடத்தல் தீவு போன்ற பகுதிகளில் தஞ்சமடைந்துள்ள முப்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட அகதிகள் உண்ண உணவின்றிப் பட்டினி கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பட்டினி காரணமாக சிறு குழந்தைகள் உட்பட நால்வர் கடந்த வாரம் உயிரிழந்துள்ளதாகவும் மேலும் பலர் பலவீனத்தால் பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

மன்னார் மாவட்டத்தின் அடம்பன், உயிலங்குளம், முருங்கன் போன்ற பகுதிகளையும் அதனைச் சார்ந்த பகுதிகளிலிருந்தும், வவுனியா மாவட்டத்தின் செட்டிகுளம் எட்டாம் கட்டை, தவசிகுளம் தேனிக்கல், கூமாங்குளம், பண்டாரிகுளம், மாறம்பைக்குளம், காத்தர் சின்னகுளம், பூந்தோட்டம், மருக்காரம்பளை, சாஸ்திரிகூழாங்குளப் போன்ற பல்வேறு பிரதேசங்களில் இருந்தும், திருகோணமலை மாவட்டத்திலிருந்தும் முல்லைத்தீவு வழியாக உயிர் தப்பி வந்தவர்களுமே, பாதுகாப்புத்தேடி இந்தியா செல்லும் நோக்கத்துடன் இவ்வாறு இக்கடற்கரைப் பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளார்கள்.

மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் விடத்தல் தீவிலும், சுமார் முப்பதினாயிரம் பேர் பேசாலை பகுதிகளிலும் அகதிகளாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவர்களுக்கு அரச நிவாரண உதவிகள் எதுவும் இதுவரையில் கிடைக்கவில்லை.

ஒரு வாரத்திற்கு முன்னர் 'போரூட்' நிறுவனம் விடத்தல் தீவில் உள்ளவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கியது. சில தினங்களுக்கு முன்னர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி ஒருவர் விடத்தல்தீவுக்குச் சென்று நிலைமையை அவதானித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க, விடத்தல் தீவு பகுதியில் மிக அரிதாக கிடைக்கும் சீனி ஒரு கிலோ நூறு ரூபாவுக்கும் அரிசி கிலோ நாற்பது ரூபாவுக்கும், தேங்காய் எண்ணெய் ஒரு போத்தல் அறுபது ரூபாவுக்கும், மரவள்ளிக்கிழங்கு, கிலோ இருபத்தைந்து ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றது. அவ்வப்போது மாத்திரம் கிடைக்கும் பணிஸ் ஒன்று நாலு ரூபாவுக்கு விற்கப்படுகின்றது. இங்குள்ள ஊர்க் கடைகளில் தேயிலை, சீனி தட்டுப்பாடு காரணமாக தேநீர் விற்பனை செய்யப்படுவதில்லை. இதே வேளையில் குடிநீர் ஒரு லீற்றர் 25 சதமாகவும் ஒரு குடம் குடிநீர் ஒரு ரூபா வரையிலும் விற்கப்படுகின்றது.

உணவுப்பற்றாக்குறை, குடிநீர் தட்டுப்பாட்டுக்கு மத்தியில் அவலமுறும் அகதிகள் இந்தியாவுக்குச் செல்ல முடியாமல் தவித்து நிற்கின்றனர். எரிபொருள் பற்றாக்குறை, படகுக் கட்டண உயர்வு, இலங்கை கடற்படையினரின் கடற் பகுதி ரோந்து நடவடிக்கை, போதிய படகுகளின்மை போன்ற காரணங்களினால் அகதிகள் அங்கேயே நிர்க்கதியாகிக் கிடக்கின்றனர்.

கையில் மடியில் இருந்த நகைகள் மற்றும் உடைமைகளை அரைகுறை விலைகளுக்கு விற்றுவிட்டு கடற்கரைப் பகுதிக்குச் சென்று படகுகளுக்காக சுமார் இரண்டு மூன்று வாரங்களாக காவல் இருந்த வேளையில் கையில் இருந்த பணமும் கணிசமான அளவு கரைந்து விட்ட நிலையில் அகதிகள் பெரும்பாலானோர் திக்கற்ற தடுமாறுகின்றார்கள்.

# 6 புலிகள் மரணம்

(நமது நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் உயிலங்குளத்துக்கும் கட்டுக்கரைக்குளப் பகுதிக்குமிடையில் பாதுகாப்பு படை வாகனத் தொகுதி மீதான தாக்குதல் சம்பவத்தில் ஆறு விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டு மேலும் பலர் காயத்துக்குள்ளாக்கப்பட்டனர் எனப் பாதுகாப்பு அமைச்சின் அறிக்கை ஒன்று கூறியது.

படையினர் ஜி 3 ரைபிள்கள், கிரனைட்டுகள், தோட்டாக்கள், மகசீன்கள் என்பவற்றைக் கைப்பற்றியதாயும் அறிக்கை கூறியது.

# கேரதீவு-சங்குப்பிட்டி படகுத்துறை சேதம்

வவுனியா,

யாழ். குடாநாட்டை நாட்டின் பிரதான பகுதியுடன், இணைக்கும் கேரதீவு - சங்குப்பிட்டி பட்குத்துறை கடந்த வாரம் இரவு குண்டுத் தாக்குதல் மூலம் சேதமாக்கப்பட்டுள்ளதாக வவுனியாவுக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

விமானக் குண்டு வீச்சின் மூலம் இந்த பட்குத்துறை சேதமாக்கப்பட்டுள்ளதனால் யாழ். குடா நாட்டுக்குள் போய் வரும் பயணிகள் பெரும் சிக்கலை எதிர்நோக்கியுள்ளார்கள்.

ஆனையிறவு பகுதியில் இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையே இடம்பெற்றுவரும் மோதல்களையடுத்து பரந்தன், ஆனையிறவு பிரதான பாதையினூடான வாகனப் போக்குவரத்து சில வாரங்களாக முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளது.

தற்போது வாகனங்களை இந்தப் பாதை வழியாகவும் கொண்டு செல்ல முடியாத போதிலும் பயணிகள் மாத்திரமே செல்லக் கூடியதாக உள்ளது.

இதேவேளை கடந்த சில தினங்களாக யாழ்ப்பாணத்திலிருந்து பெருந்தொகையான பயணிகள் இப் படகுத்துறை வழியாக வவுனியா வந்து அங்கிருந்து இராணுவ பாதுகாப்புடனான பஸ் மூலம் மதவாச்சியை அடைந்து ரயில் மூலம் கொழும்பிற்குச் சென்றனர். இச் சம்பவத்தின் பின்னர் இப் பாதையினூடாக வரும் பயணிகள் தொகை கணிசமான அளவில் குறைந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

ஈரோஸ் எம்.பி.க்களது இராஜினாமா

# பாரதூரமான விளைவுக்கு இட்டுச்செல்லும்

## மலையக மக்கள் முன்னணி கவலை

(கேசரி நிருபர்)

ஈரோஸ் எம்.பி.க்களின் இராஜினாமாவானது தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயகவழியில் நம்பிக்கையிழந்திருப்பதையே காட்டுகிறது. ஜனநாயகத்திலும் செயற்பாட்டிலும் தமிழ் அமைப்புகளுக்கு நம்பிக்கை ஏற்படுத்தவேண்டிய இந்த நேரத்தில் அவர்களை நம்பிக்கை இழக்கவைத்திருப்பது பாரதூரமான விளைவுகளுக்கு இட்டுச் செல்லும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ. சந்திரசேகரன் விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

ஈரோஸ் உறுப்பினர்கள் பதவியில் இருந்து விலகியிருப்பதை நல்ல அறிகுறியாக நாம் கருதமுடியாது. ஆயுதமேந்திப் போராடிய தமிழ் போராளி அமைப்புகள் அரசாங்கத்தின் அணுகுமுறையினாலும், ஜனநாயக வழியில் செயற்பட முடியுமென்ற நம்பிக்கையினாலும் ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநாயக வழிக்குத் திரும்பியிருந்தன.

மோசமான நெருக்கடிகளுக்கு தமிழ் மக்கள் முகம் கொடுக்கின்ற இந்நேரத்தில் அவர்களுக்காக குரல் கொடுக்க வேண்டியவர்கள் தங்கள் பொறுப்பிலிருந்து விலகிக்கொள்ளாமல் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் விதத்தில் நடந்துகொள்ள வேண்டும்.

மக்களைப் பாதுகாக்கும் பணியில் அனைத்து அமைப்புகளும் ஒன்றுபட வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கிறோம்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாராளுமன்ற பலகணி

நாட்டின் இன்றைய யுத்த நிலைக்குக் காரணமான மிக முக்கிய, பாரதூரமான இனப் பிரச்சினைபற்றி செவ்வாயன்று பாராளுமன்றத்தில் நான்கு மணி நேரத்திற்கும் மேல் பேசப் பட்டது. வாதப் பிரதிவாதங் கள், வாய் தர்க்கங்கள் இல்லை. சொற்போர், இல்லை, சூடு பறக் கவும் இல்லை. மிகமிக் அமைதி யாக ஆளுங்கட்சி, எதிர்க் கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த எம்.பிக்கள் பலரும் இனப் பிரச் சினை பற்றிப் பேசினார்கள்.

இந்த அமைதியான ஆய் வுக்கு ஒரு தமிழ் எம்.பியின் மறைவே வழிவகுத்தது. இனப் பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு காண ஆயுதப் போராட் டத்தைக் கைவிட்டு பாராளு மன்றம் வந்த அந்த எம்.பி. வி.கே. யோகசங்கரியே.

கடந்த மாதம் தமிழ் நாட் டில் சுட்டுக் கொல்லப்பட்ட யோகசங்கரிக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை மீதே இனப் பிரச்சினை ஆய்வு இடம் பெற்றது. அப்போது சகல கட் சியினரும் தமிழ் மக்களின் பிரச் சினைகளை அடிப்படையாக வைத்து கருத்துக்களை ஆழமாக வெளியிட்டனர்.

யோகசங்கரி, குறுகிய காலமே பாராளுமன்றத்தில் பிரதிநிதித் துவம் வகித்தார். 1989 மார்ச் சில் பாராளுமன்றத்துக்கு வந்த அவர் கடந்த மாதம் 19ஆம் திகதி சென்னையில் படுகொலை செய்யப்படும் வரை எம்.பி.யாக இருந்தார்.

நல்ல நோக்கங்களுக்கு அழி வில்லை என்பது போல் யோக சங்கரி மறைந்தாலும் அவரது நல்ல நோக்கம் வாழத்தான் செய்கிறதென்பதை பாராளு மன்ற உரைகளிலிருந்து அறிய முடிந்தது.

1952ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி பிறந்து யாழ். இந்துக் கல்லூரியில் பயின்று, லண்டனுக்குச் சென்று கணக்காளராக தகைமை பெற் றவர் யோகசங்கரி. பாடசாலை யில் பயிலும் போதே கெடட் படை, சிறுவர் சாரணர் அணி ஆகியவற்றில் இணைந்து செயல் பட்டார். 1976இல் ஈ.பி.ஆர். எல்.எப். அமைப்பில் லண்டனிலி ருந்தபோதே இணைந்து கொண்ட அவர் தமிழ் சமூகத் தின் உரிமைக்காகப் போராடத் தொடங்கினார்.

இந்த விபரங்களை பாராளு மன்றத்தில் முன் வைத்த அமைச்சர் வின்சன்ட் பெரேரா, குறுகிய காலத்தில் பாராளுமன் றத்தில் நண்பர்கள் பலரை தேடிக் கொண்டவர் யோகசங் கரி என்றும் விபரித்தார்.

சுதந்திரக் கட்சி சார்பில் அனுதாப உரை நிகழ்த்திய திரு. ரிச்சட் பத்திரன இனப் பிரச் சினைக்கு முக்கியத்துவம் அளித் தார். தற்போதைய நெருக்கடி நிலைக்குக் காரணமாக இருந்த வற்றை ஆராய்ந்தார். அமிர்த லிங்கம், சாம்தம்பிமுத்து, யோக சங்கரி போன்றோரின் அரசியல் படுகொலைகளை காரசாரமாக கண்டித்த அவர் இவற்றுக் குக் காரணமாக இருந்த புலி களுடன் உறவாடிய அரசை விமர்சித்தார்.

ஈழக் கோரிக்கை தொடர் பாக வரதராஜபெருமாள் எடுத்த நடவடிக்கை பிழையாக இருக்கலாம். ஆனால் யோக சங்கரி போன்ற எம்.பிக்கள் நாட்டின் ஒருமைப்பாட்டையே விரும்பினர் என பத்திரன குறிப் பிட்டார்.

அவரைத் தொடர்ந்து பேசிய ஆனந்த தஸநாயக்க மறைந்த யோகசங்கரியின் சிறப்புகளை படம் பிடித்துக் காட்டினார்.

ஐக்கிய சோஷலிஸ முன்னணி யைச் சேர்ந்த அத்தாவுட செனு விரத்ன, இன்றைய மோசமான நிலைக்கு காரணம் யாது என் பதை ஆராய்ந்தார். மாகாண சபைகளுக்கு இன்னமும் போதிய அதிகாரம் கொடுக்கவில்லை என்பதையும் அவர் வலியுறுத்தி னார். ஜனநாயக வழியில் பிரச் சினைக்குத் தீர்வு காண வந்த யோகசங்கரியின் பெருமையை யும் அவர் விபரித்தார். சுரேஷ் பிரேமச்சந்திரன் பேசுகையில் இங்கு எவ்வாறு அரசின் அரவ வணைப்புக்குள்ளிருந்து அமிர், யோகேஸ், சாம் தம்பிமுத்து ஆகியோரைக் கொலை செய் தார்களோ அதேபோல் அங்கும் மாநில அரசின் அரவணைப்புக் குள் பத்மநாபா, யோகசங்கரி, கிருபாகரன் உட்பட பல தோழர்கள் கொல்லப்பட்டனர் எனக் குறிப்பிட்டார்.

கொலைக் கலாசாரத்துக்கு முடிவு கட்ட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜே. திவ்வியநாதன் எம்.பி. மீண்டும் பேச்சுவார்த்தை ஆரம் பிக்கப்பட வேண்டும். ஆனால் எல்லாக் குழுக்களும் கட்சிக ளும் பேச்சில் கலந்து கொள்ள வேண்டும். இல்லையேல் மீண் டும் போர் வாடைதான் வீசும், என்றார்.

அமைதிப் பேச்சாளர் மாவை சேனாதிராஜா கொலைகள் அவசியம்தானா என கேள்வி எழுப்பினார். தமிழர் போராட் டத்தில் கலந்து கொண்ட முஸ் லிம்கள் கொல்லப்படுவதையும் வேதனையுடன் அவர் சுட்டிக் காட்டினார்.

சு.க. எம்.பி. டி. எம். ஜய ரத்ன கொலையுண்ட யோக சங்கரியின் குணநலன்களை வாழ்த்தினார்.

முஸ்லிம் சமய கலாசார ராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் இறைநாமம் கூறி உரையை ஆரம்பித்து இஸ்லா மிய முறையில், இன்னாலில் லாஹி வஇன்னா இலைஹிராஜி ஊன்" என அனுதாபம் தெரி வித்தார். (எவராவது மரணித்த தாக அறிந்ததும் முஸ்லிம்கள் இப்படித்தான் கூறுவார்கள்) "அன்புடையார் என்றும் உரியர் பிறர்க்கு" என்ற பொய்யா மொழியை சுட்டிக் காட்டிப் பேசிய அவர் அநியாயமான கொலைகளைக் கண்டித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் களில் வித்தியாசமானவராக காட்சியளிக்கும் வாசுதேவ நாணயக்கார அனுதாப உரை யையும் வித்தியாசமாகவே நிகழ்த்தினார். யோகசங்கரி மறைவுக்காக அரசுடன் சேர்ந்து அனுதாபம் தெரிவிக்க முடியாது: அரசு விடும் கண் ணீர் முதலைக் கண்ணீர் போன் றதென விளக்கிய அவர், இன்று [illegible] தல்ல எனக் கூறப்பட்டாலும் எல்.ரி.ரி.ஈக்கு எதிரான யுத்தம் நாளடைவில் தமிழருக்கு எதி ரான யுத்தமாக மாறலாம் என எச்சரிக்கையும் விடுத்தார்.

இந்நாட்டு தமிழ் மக்களின தும் தமிழ் பேசும் முஸ்லிம்களி னதும் பிரச்சினை யோகசங்கரி யின் மரணத்துடன் சம்பந்தப் பட்ட பிரச்சினையாக உள்ளது என விளக்கிய வாசுதேவ, தமிழ் பேசும் மக்களின் உரிமை களை வழங்குவதன் மூலமே பிரச்சினையைத் தீர்க்கலாம். இந்தியாவுக்குச் சென்று பேசி இந்தியாவை தலையிடச் செய்து பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்றும் சுட்டிக் காட்டினார்.

இனக்கலவரம் ஒன்று ஏற் படாதிருப்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் தமிழர் விரோத போக்கு வளர்கிறது. நாளடைவில் அது மோசமாக இடமளிக்கக் கூடாது என்றும் வாசுதேவ குறிப்பிட்டார்.

இம்மானுவேல் சில்வா, கே. நவரத்தினம், எம். எச். அமீர் ஆகியோரும் அனுதாப உரை களை நிகழ்த்தினர். அனுதாப உரைகள் நிகழ்த்தப்படும்போது அரச, எதிர்க்கட்சி வரிசை நாற் காலிகள் பெரும்பாலும் வெறிச் சோடியே காணப்பட்டன.

மிகக் குறுகிய காலம் எம்.பி. யாக இருந்த யோகசங்கரிக்கு அனுதாபம் தெரிவிக்கும் உரை கள் 4 மணி நேரத்துக்கு மேல் இடம் பெற்றது குறிப்பிடத் தக்கதாகும்.

— எம். பி. எம். அஸ்ஹர்.

## 'ஷெல்'லுக்குப் பதுங்கிய இளைஞன் மிதி வெடிக்கு பலி!

வவுனியா,

வவுனியா குருமண்காடு பகுதியில் வாகனம் ஒன்றை எடுத்துவரச் சென்ற வேளை யில் மிதிவெடிக்கு இலக் கான இளைஞர் ஒருவர் இரு கால்களையும் இழந்ததுடன் இரத்தப் பெருக்கு காரண மாக உயிரிழந்துள்ளார்.

இப் பகுதியில் வீடு ஒன் றில் நிறுத்தப்பட்டிருந்த வாகனத்தை எடுத்துக் கொண்டு செல்ல முற்பட்ட வேளையில் இராணுவ முகா மில் இருந்து மேற்கொ ளப்பட்ட ஷெல் தாக்குதல் களில் இருந்து தப்புவதற் காக இவரும் இவரோடு வந்த வேறு சிலரும் ஓடிப் பதுங்கிய போது பிரஸ்தாப இளைஞர் மிதி வெடியின் மீது மிதித்ததால் இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது.

காயமடைந்த இவரை உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முடியாமல் ஷெல் தாக்கு தல்கள் தொடர்ந்ததாக வும் இதனால் ஏற்பட்ட சுமார் இரண்டு மணித் தியால நேரத் தாமதம் காரணமாகவே இவர் உயிர் இழந்ததாகவும் அறியப்படு கிறது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நிலையான ஒரு தீர்வை சீர்குலைக்கும் முயற்சி

## ஈ.பி.ஆர்.எல்.எப். குற்றச்சாட்டு

[நமது நிருபர்]

புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையிலான மோதலில் ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படும் செய்திகள் கிடைத்துக் கொண்டிருக்கும் சமயத்தில் காத்தான்குடிச் செய்தியும் வந்துள்ளது. நிலையான ஓர் தீர்வு ஏற்படுவதை சீர் குலைப்பதற்கும் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் தொடர்ச்சியான ஓர் விரிசலை ஏற்படுத்துவதற்காகவுமே புலிகள் இதனை திட்டமிட்டுக் செய்கின்றனர் புலிகளின் இக் கபட நோக்கங்களை முஸ்லிம் சமூகம் புரிந்த கொண்டு தமிழ் முஸ்லிம் மக்களிடையில் இறுக்கமான ஐக்கியத்தை உருவாக்க உழைக்குமாறு வேண்டுகிறோம் என்று ஈ. பீ. ஆர். எல். எப்-விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் பாராமுகத்தினால் வளர்ந்த புலிகளின் பயங்கரவாத நடவடிக்கையே இன்று எல்லா இன மக்களும் துன்பப்படுவதற்கு காரணம். முழுமையான யுத்த நிறுத்தமும் அரசியல் தீர்வுமே சரியான முறையில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழியாகும் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிகத் தெளிவான முறையில் அரசு வடக்கு, கிழக்கு மாகாண சபைக்கு அதிகாரங்களை வழங்குவதை துரிதப்படுத்த வேண்டும். இச் சண்டையில் சம்பந்தப்பட்ட அனைவரும் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் வாழும் பல் இன மக்கள் மத்தியில் தோன்றியிருக்கும் கெடுபிடி நிலையை அகற்றுவதற்கு துரிதமாக செயற்பட வேண்டும் என்றும் கோருகின்றோம். புலிகள் தாம் நடத்தும் கொலைகளை மறைமுகமாகச் செய்வதற்கு "செம்படை 90" என்ற ஓர் புதிய இயக்கத்தை உருவாக்கியுள்ளதை மட்டுநகர் புலிகளின் பொறுப்பாளர் கரிகாலனின் அறிக்கை தெளிவாகக் காட்டுகின்றது. இக்கோழைத்தனமான நடவடிக்கைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# களுவாஞ்சிக்குடி, வெல்லாவெளி பகுதிகளில் மக்கள் இல்லை

## அகதிகள் வெட்ட வெளியில் தஞ்சம்; பஞ்சம், தொற்று நோய் பரவுகிறது

மண்டூர்,

களுவாஞ்சிக்குடி கமநல சேவை திணைக்கள அலுவலகத்தில் இராணுவத்தினர் முகாமிட்டிருப்பதனாலும், அம்பாறை - மட்டக்களப்பு எல்லைக் கிராமங்களான 11 ஆம் கொலனி, 16 ஆம் கொலனி, மாலையர் கட்டு பகுதிகளில் படையினரின் நடமாட்டம் உள்ளதனாலும் இப் பகுதிகள் மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

பிரதானமாக களுவாஞ்சிகுடியிலும், வெல்லாவெளியிலும் குடியிருந்த மக்கள் எல்லோரும் அச்சம் காரணமாக வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். களுவாஞ்சிகுடியில் உள்ள பல வீடுகள் உடைக்கப்பட்டு பெறுமதியான பொருட்கள் அபகரிக்கப்பட்டுள்ளன.

களுவாஞ்சிகுடி மற்றும் படையினர் நிலைகொண்டுள்ள பகுதிகளில் வசித்து வந்த குடும்பங்கள் படுவான்கரையின் பல்வேறு பகுதிகளிலும் அகதிகளாக உள்ளதால் அகதிகள் வெட்ட வெளி: இங்கு கட்டிடங்கள் இல் வெளியிலேயே இரவிலும், பகலிலும் தங்கி வருகின்றனர்.

களுவாஞ்சிகுடி, பக்கிளல்ல, பழுகாமம், மகிழடித்தீவு, செட்டிபாளையம், துறைநீலாவணை ஆகிய இடங்களில் உள்ள கிராமிய வைத்தியசாலைகள் தொடர்ந்து மூடிக் கிடக்கின்றன. அகதிகளுக்கு அரசாங்க நிவாரணப் பொருட்கள் எதுவும் இதுவரை வந்து சேராதத ஒருபுறமிருக்க கண் நோய், வயிற்றோட்டம், காய்ச்சல் போன்ற பலவித தொற்று நோய்களும் ஏற்பட்டுள்ளன. குழந்தைகளே தொற்று நோய்களுக்கு அதிகம் உள்ளாகியுள்ளனர்.

மண்டூரில் உள்ள அகதிகளுக்கு றெட்பானா நிறுவனம் அரிசி, சீனி, மா, தீப்பெட்டி அடங்கிய 1275 பார்சல்களை இதுவரை வழங்கியுள்ளது.

பாலையடிவட்டை, நெல்லிக்காடு, விபுலானந்தபுரம், வெல்லாவெளி, புளியங்குளம், விளாந்தோட்டம் பகுதியில் உள்ள அகதிகளுக்கும். றெட்பானா நிறுவனம் 10 ஆயிரம் கிலோ அரிசி வழங்கியது. ஏனைய பகுதிகளில் உள்ள ஆயிரக்கணக்கான அகதிகள் பட்டினியால் வாடிக் கொண்டிருக்கின்றனர்.

# அப்பாவிகளை கொல்வதால் உரிமைகளை வெல்ல முடியாது -புளொட்

(நமது நிருபர்)

தமது தவறான அரசியல், இராணுவ மூலோபாயங்களினால் போராட்டம் சிதைக்கப்பட்ட போதெல்லாம் புலிகள் முஸ்லிம் சிங்கள அப்பாவி மக்களைப் படுகொலைசெய்வதன்மூலம் தமிழ் மக்களிடையே வகுப்புவாத உணர்வுகளைத் தூண்டி பெருமளவு ஆயுதங்களை அந்நிய சக்திகளிடம் பெற்று அவர்களிடமே எமது போராட்டத்தை நிரந்தரமாக அடகு வைத்துள்ளமை கடந்தகால வரலாறாகும்.

தமிழ், முஸ்லிம் அப்பாவி மக்களை படுகொலை செய்வதன் மூலம் தத்தமது அரசியல், சமூக உரிமைகளை வென்றுவிடலாம் என்ற தவறான கணிப்பில் செயல்படுவதை முஸ்லிம்களுக்காக முதலைக் கண்ணீர் வடித்த புலிகளும், முஸ்லிம் மக்களிடையேயுள்ள பிற்போக்கு தீய சக்திகளும் நிறுத்திக் கொள்வதோடு வடக்கு-கிழக்கு இணைந்த தமிழ் பேசும் தாயகமென்ற வரைவுக்குள் தமிழ், முஸ்லிம் மக்களின் அடிப்படை உரிமைகளை வென்றெடுக்க ஒன்றிணைய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு புளொட் காத்தான்குடி சம்பவம் தொடர்பாக விடுத்த கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மாவட்டங்களின் நிர்வாக பிரிவுகளை ஒரு மாவட்டத்திலிருந்து பிரித் இன்னொரு மாவட்டத்தில் சேர்ப்பது, மாகாண நிர்வாக அதிகாரிகளை புதிதாக நியமிப்பது, இடம் பெயர்ந்தவர்களை ஒரு தலைப்பட்சமாக மீளக் குடியமர்த்துவது போன்ற தமிழ் பேசும் மக்களின் நீண்ட கால நலன்களைப் பாதிக்கும் நடவடிக்கைகளை அரசு உடனடியாக நிறுத்தி ஜனநாயக வழிகளை நடைமுறையில் ஏற்று செயல்படும் தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளுடனான பேச்சுக்களை துரிதப்படுத்தி தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்க்கமான தீர்வினை உருவாக்கி சகல இன மக்களினதும் அடிப்படை உரிமைகளையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்த முன்வர வேண்டும்.

# வீடுவீடாக பிச்சை எடுக்கும் அகதிச் சிறார்கள்

(நமது நிருபர்)

வீடு வாசல்களை இழந்து, உறவினர் பலரை இழந்து மட்டக்களப்பு மாவட்டத்திற்கு அகதிகளாக வந்துள்ள அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான அகதிகள் பட்டினிச் சாவை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

சவளக்கடை மத்திய முகாம் 16ஆம், 17ஆம், 11ஆம், 4ஆம் கொலனிகளைச் சேர்ந்த மக்களுக்கு இதுவரை எதுவித நிவாரணமும் வழங்கப்படவில்லை.

பசி தாங்க முடியாத அகதிச் சிறார்கள் தஞ்சமடைந்துள்ள கிராமங்களில் வீடு வீடாகச் சென்று பிச்சை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

சம்பளம், ஓய்வூதியம், அனாதைகளுக்கான உபகார நிதி என்பவற்றில் தங்கியுள்ள மக்கள் இரண்டு மாதமாக கொடுப்பனவு பெற முடியாது திண்டாடுகின்றனர். 35ஆம், 37ஆம் குறிச்சி கிராம மக்கள் இன்னமும் தமது வீடு திரும்பவில்லை.

மட்டக்களப்பு - அம்பாறை எல்லைக் கிராமங்களிலுள்ள 16ஆம், 37ஆம், 38ஆம், 39ம், 40ம் குடியேற்ற கிராமத்தில் விளைந்த வேளாண்மையை அறுவடை செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மட்டக்களப்பு வாவியில் போக்குவரத்து செய்ய தடைசெய்யப்பட்டிருப்பதால் பட்டிருப்பு தொகுதியான படுவான் கரை பிரதேசம் எழுவான் கரை பகுதியுடன் முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாகாண சபைக்கு

# உரிய அதிகாரங்களை கொடுக்காததும் யோகசங்கரி மறைவுக்கு ஒரு காரணம்

## நவரத்தினம் எம். பி. அனுதாப உரை

(பாராளுமன்ற செய்தியாளர்கள்)

தனியாக பிரிந்தால் தான் தமிழன் வாழ முடியும் என்ற கருத்துக்கு எதிராக எப்போதுமே வாதாடி வந்தவர் யோகசங்கரி. ஈழம் பிரிந்தால் மேலும் அடிமையாக வாழ வேண்டிய நிலை ஏற்படும் என்ற நிலைப்பாட்டைக் கொண்ட அவர் இடதுசாரிகளுடன் நெருக்கமான தொடர்பை வைத்திருந்தார் என யாழ்ப்பாண மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி.யான கே. நவரத்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

யோகசங்கரி எம்.பி.யின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை மீது உரை நிகழ்த்திய நவரத்தினம், யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில் யோகசங்கரி கல்வி கற்ற காலத்திலிருந்தே தனக்கு அவரைத் தெரியும் என்றும், கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் மாஸ்டரின் மாணவரான அவர் ஆரம்பம் முதலே இடது சாரிச் சிந்தனைகளினால் கவரப்பட்டிருந்தார் என்றும் கூறினார்.

அவர் தமதுரையில் மேலும் கூறியதாவது:

யோகசங்கரி மாணவ பராயத்திலேயே சமூகத் தொண்டு மனப்பான்மை கொண்டவராக இருந்தார். ஈழ மாணவர் இயக்கத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரான அவர் பின்னர் லண்டன் சென்று ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்துக்காக பாடுபட்டார். தனது இறுதி மூச்சு வரை ஈழம் பிரிவினை கருத்துக்கு எதிரானவராகவே இருந்தார். ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு ஒன்று காணப்பட்டு அதில் தமிழர்கள் அமைதியாக வாழ வேண்டும் என்ற நம்பிக்கையை கொண்டிருந்தார்.

யோகசங்கரியின் மறைவுக்கு வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு உரிய முறையில் அதிகாரங்களை கொடுக்காமல் அதை சீர்குலைத்த அரசாங்கத்தின் செயல்தான் ஒரு வகையில் காரணம் என்று கூறுவேன்.

இன்று வடக்கு - கிழக்கிலே என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது? புலிகளுக்கு எதிரான போர் இது என்று சொல்கிறீர்கள். சரி ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால் இறப்பவர்கள் யார்? பொதுமக்கள் தான். அரசாங்கப் படைகளினால் புலிகளை இனங்காண முடியாவிட்டால், சுலபமாகச் சந்திக்க கூடிய பொது மக்களை பிடித்து கொலை செய்வது சரியா? கொலையை ஆயுதப்படைகள் செய்தாலும் சரி புலிகள் செய்தாலும் சரி அது கொலையென்றுதான் நான் சொல்வேன். அதில் வேறுபாடெதுவும் இல்லை.

### திகாமடுல்ல எம்.பி. பேச்சு

திகாமடுல்ல மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி. ஜே. திவ்வியநாதன் அனுதாப உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:-

கொலைக் கலாசாரத்துக்கு முடிவு கட்ட வேண்டும். மீண்டும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். ஆனால், சகல தமிழ்க் குழுக்களுடனும் கட்சிகளுடனும் அரசாங்கம் பேச்சு நடத்தாமல் ஒரு குழுவுடன் மாத்திரமே பேசி மீண்டும் தவறிழைக்குமானால், மீண்டும் போர் வருவதையே விரும்பும் என்பதை நினைவுறுத்த விரும்புகிறேன்.

புலிகள் அரசியல் பொது வோட்டத்திற்குள் பிரவேசிக்க வேண்டும் என்பதை என்து 'டெலோ' இயக்கத்தின் ஆத்திரத்துக்கு மத்தியிலும் இச்சபையில் அடித்துப் பேசியவன் நான். புலிகளின் கொலைப் பட்டியல்கள் நீண்டுகொண்டே போகின்றது. இதில் தமிழ்க் குழுக்கள் மட்டுமல்ல, ஐக்கிய தேசியக் கட்சி, சிறி லங்கா சுதந்திரக் கட்சி, முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர்களும் இருக்கிறார்கள்.

மக்கள் அழித்தொழிக்கப்படும் நிலைக்கு ஒரு முடிவு கட்ட நாம் அனைவரும் செயற்பட வேண்டும்.

### மாவை உரை

மாவை சேனாதிராசா எம்.பி. பேசியதாவது:-

''40 ஆண்டுகள் தமிழ் மக்களுக்காகப் போராடிய எம் தலைவர் கடந்த ஆண்டு கொல்லப்பட்டார். இந்த வருடமும் சாம் தம்பிமுத்து, யோகசங்கரி, பத்மநாபா, கிருபாகரன் மற்றும் பத்து முக்கியஸ்தர்கள் கொல்லப்பட்டனர். மனித நேயமும் இலட்சிய தாகமும்கொண்ட நல்ல நண்பர் யோகசங்கரி. ஆழமான அரசியல் பின்னணி உள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர் அவர். மிகவும் நிதானமான- ஆழமான கொள்கை பற்றுமிக்கவர். தன்னைக் கொல்ல முயற்சிக்கிறார்கள் எனத் தெரிந்தும் துணிச்சலுடன் தேர்தலில் நின்றார்! வெற்றி பெற்றார்.

கடந்த 40 ஆண்டுகளை விட, இன்றைய நிலையில் எமது இனம் அழிந்து விடுமோ என்ற அச்சம் தோன்றியிருக்கும் தருணத்தில் யோகசங்கரி கொல்லப்பட்டிருக்கிறார். சென்னையில் நடைபெற்ற இக்கொலைகளை காட்டுமிராண்டித்தனமானவை என்றே விபரிக்க வேண்டும்.

சகோதரக் கொலைகளால் நாம் வேதனைப்படுகிறோம். தமிழர் போராட்டத்துக்குத் தலைமைதாங்க வந்த ஒவ்வொருவரும் கொல்லப்படுகின்றனர். தமிழர்களின் விடுதலைக்கு எமது உயிர் வேண்டுமென்றால் அதைக் கொடுக்க நாம் தயார். ஆனால் எமது உயிர் விடுதலைக்காக அல்ல வெறுமனே பலிவாங்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகள் ஏன் இக்கொலைகளைப் புரிகின்றனர்? இத்தகைய கொலைகள் நீடிக்கத்தான் வேண்டுமா?

1956-58 களில் எம்முடன் போராட்டங்களில் ஈடுபட்ட முஸ்லிம்கள், முஸ்லிம் மாதர்கள் இன்று எம் கண்முன்னாலேயே அழிக்கப்படுகின்றனர். முஸ்லிம் மக்களுடன் மோதி எமக்குள்ளேயே நாம் அழியத்தான் வேண்டுமா?

யுத்தத்தை நிறுத்தி அமைதிவழியில் பிரச்சினைக்கு தீர்வுகாணுமாறு அரசையும் எதிர்க்கட்சிகளையும் ஏனைய தமிழ்க்குழுக்களையும் அழைக்கிறேன்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "மாகாணசபை கலைப்பே இன்றைய நிலைக்கு காரணம்"

## —அதிகாரம் வழங்கி தீர்வு காணுங்கள் என அத்தாவுட எம்.பி. வலியுறுத்து

(நமது சபை நிருபர்கள்)

வட-கிழக்கு மாகாண சபைக்கு போதியளவு அதிகாரம் கிடைத்திருந்தால் இன்றைய மோசமான நிலை உருவாகியிருக்காது என ஐ.சோ.மு. எம். பி. திரு. அத்தாவுட செனவிரத்ன பாராளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

ஐக்கிய இலங்கைக்காக பாடுபட்ட யோகசங்கரியின் உயிர்த்தியாகத்தின் பெயராலாவது மாகாணசபைக்கு அதிகாரம் வழங்கி தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நியாய தீர்வுகண்டு நாட்டை சமாதான வழியில் நடத்த வேண்டும் என்றும் திரு. அத்தாவுட செனவிரத்ன தெரிவித்தார்.

ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண முற்பட்ட அமைப்பின் இளம் தலைவர் வி. கே. யோகசங்கரி என்றும் திரு அத்தாவுட செனவிரத்ன எம்.பி. தெரிவித்தார்.

மறைந்த திரு. யோகசங்கரிக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை மீது பேசிய திரு. அத்தாவுட செனவிரத்ன மேலும் கூறியதாவது:

திரு. அமிர்தலிங்கத்தின் மறைவின் பின் திரு. யோகசங்கரி பாராளுமன்றத்தில் பெரும் சேவை புரிந்தார். இத்தகைய தலைவர்களைக் கொலை செய்த எல்.ரி.ரி.ஈ. பாஸிஸ போக்கில் செயல்படுகிறது. தாம் மட்டும் வாழவேண்டும் மற்றவர்கள் அழியவேண்டும் என்ற எல். ரி. ரி. ஈ.யின் போக்கு ஜனநாயகத்துக்கு விரோதமானது. இக்கொள்கை நீடித்து நிலைக்காது.

மாகாணசபைக்குள் பெருமாளின் நிர்வாகத்தில் தவறுகள் இருந்தது உண்மை. அவற்றை சீர்திருத்த வழி செய்திருக்க வேண்டும். ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எப். வைபலமிழக்கச் செய்வதன் மூலம்எல்.ரி.ரி.ஈயின் கையை ஓங்கச் செய்துவிட்டீர்கள்.

வட-கிழக்கு மாகாண சபையைக் கலைக்காமலிருந்தால் இன்றைய நெருக்கடி நிலையில் அச்சபையை நன்றாகப் பயன்படுத்தியிருக்கலாம். மாகாணசபைகளுக்கு உரிய அதிகாரங்களைக் கொடுத்திருந்தால் வட-கிழக்கு மாகாணசபை அங்கு பலம் பெற்றிருக்கும். இன்றைய நிலையும் ஏற்பட்டிருக்காது.

இலங்கையில் பாதுகாப்புக்கிடைக்காது என நம்பி இந்தியாவுக்கு கூட்டம் நடத்தச் சென்ற யோகசங்கரி போன்றோருக்கு இங்கும் பாதுகாப்பு இருக்கவில்லை.

எதிர்க்கட்சி எம். பி.க்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படுவது அவசியம். இதேபோன்று ஐக்கிய இலங்கைக்காகப் பாடுபட முன்வருவோரையும் ஊக்குவிக்க வேண்டும்.

# ஒலுவில், பாலமுனையில் பதினெட்டு சடலங்கள்!

(அன்டன் எட்வேர்ட்)

அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று பகுதியில் உள்ள ஒலுவில், பாலமுனை ஆகிய இடங்களில் பதினெட்டு முஸ்லிம் விவசாயிகள் கொல்லப்பட்டு கிடந்ததாக முஸ்லிம் காங்கிரஸ் உபதலைவர் எம். ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

இதேவேளை அக்கரைப்பற்றிலிருந்து ஆறாவது மைல் கல்லில் ஆறு சடலங்கள் நெற்றியில் சூட்டுக் காயங்களுடன் கிடக்கக் காணப்பட்டதாகவும் சடலங்களுக்கு அருகில் அம்பாறை மாவட்டத்திலிருந்து முஸ்லிம்கள் இம்மாதம் பத்தாம் திகதிக்கு முன்னர் வெளியேறிவிட வேண்டுமென்று குறிப்பு ஒன்று போடப்பட்டிருந்ததாயும் அவர் மேலும் சொன்னார்.

இது விடயமாக பாதுகாப்பு, ராஜாங்க மந்திரியின் கவனத்துக்குக்கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் இப்போது அப்பகுதில் அதிரடிப் படையினர் முற்றுகையிட்டு பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# 'அகதி முகாமில் 'ஷெல்' விழுந்தது ஆசிரியர் பலியானார்

மட்டக்களப்பு,

மட்டக்களப்பு இந்துக் கல்லூரி ஆசிரியரான எஸ். செல்வரத்தினம் ஷெல் தாக்குதலில் அகப்பட்டு மரணமானதாக வாழைச்சேனை உதவி அரசாங்க அதிபரினால் மட்டக்களப்பு அரசாங்க அதிபருக்கு முறையிடப்பட்டுள்ளது.

புல்லுமலையைச் சேர்ந்த இந்த ஆசிரியர் வந்தாறுமூலை பல்கலைக்கழக அகதிகள் முகாமில் தங்கியிருந்தார். வெள்ளிக்கிழமை இரவு அப்பகுதியில் ஷெல் ஒன்று வந்து விழுந்து வெடித்ததால் அவர்படுகாயமடைந்து மறுதினம் சனிக்கிழமை மரணமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## காலஞ்சென்ற மா. ச. உறுப்பினர்

# தம்பிராசாவின் மனைவி, மற்றொரு பெண் மாயம்!

[பால. விவேகானந்தா]

திருகோணமலையில் வட-கிழக்கு மாகாண சபை உறுப்பினரான காலஞ்சென்ற ஜோர்ஜ் தம்பிராசாவின் மனைவி ஜோர்ஜ் சகுந்தலாவையும், அவருடன் சென்ற எல். ஜயக்குமாரி என்ற பெண்ணையும் வியாழக்கிழமை மாலையிலிருந்த காணவில்லை எனப் பொலிசார் கூறினர்.

பொலிசாருக்கு அளிக்கப்பட்ட தகவல்களின்படி இருவரும் வெளிச்சவீட்டுப் பகுதியில் உள்ள தம்பிராசாவின் புதை குழியை துப்புரவாக்கச் சென்றனர் என்றும் வெள்ளிக்கிழமை வரை அவர்கள் வீடு திரும்ப வில்லை எனவும் கூறப்பட்டது.

முல்லைத்திவில் வியாழக்கிழமை காலை 10 மணியளவில் தரை இறங்க முயன்ற விமானப் படை ஹெலிகொப்டர் மீது புலிகள் தாக்குதல் நடத்தினர். சுமார் 45 நிமிடம் மேற்கொளளப்பட்ட இத்தாக்குதல் விமானத்திலிருந்த பதில் தாக்குதலால் முறியடிக்கப்பட்டத எனப் பொலிசார் கூறினர்.

காயமுற்ற மூன்று இராணுவத்தினரை எடுத்துச் செல்ல இந்த ஹெலி முயற்சித்ததாயும் தாக்குதலில் இ. போ. ச. வேலைத்தலக் கட்டிடம் சேதமுற்றதாயும் பொலிசார் கூறினர். இக்கட்டிடத்தில் பொலிசாரும், இராணுவத்தினரும் தங்கியுள்ளதாயும் கூறப்பட்டது.

கந்தளாயில் பேராறு இரண்டாம் கொலனியில் புதன்கிழமை இரவு எஸ். ரபாய்தீன் என்பவர் ஆயுதபாணிகளால் கடத்திச் செல்லப்பட்டு. மறுநாள் சடலம் வயல்வெளியில் கண்டு பிடிக்கப்பட்டதாகப் பொலிசார் கூறினர்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கிளிநொச்சி மயான பூமியாக காட்சியளிக்கிறது; நெற் செய்கை பாதிப்பு

வவுனியா,

கடந்த ஜூன் மாத நடுப்பகுதி தொடக்கம் ஜூலை மாத இறுதி வரையிலான ஒன்றரை மாதகால பகுதியில் கிளிநொச்சியில் இடம்பெற்ற மோதல்கள் இராணுவ நடவடிக்கைகளினால் 50க்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்துள்ளதாகவும் 150 பேர் வரையில் காயமடைய நேரிட்டதாகவும் கிளிநொச்சி அபிவிருத்தி அகதிகள் புனர்வாழ்வு கழகம் அறிவித்துள்ளது.

காயமடைந்த பொதுமக்களில் 50 பேர் வரையில் படுகாயமடைந்து ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டு இன்னும் சிகிச்சைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தரப்பில் ஏற்பட்ட இந்த பாரிய சேதங்கள் இராணுவத்தினரின் தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்கள் மற்றும் பொம்பர் ஹெலிக்கொப்டர்களின் தாக்குதலினாலேயே ஏற்பட்டதாகவும் போதிய வைத்திய கவனிப்பும் சத்திர சிகிச்சை, இரத்தப் பெருக்கை ஈடுசெய்யமுடியாமை, வைத்திய மருந்து வசதிகள் என்பன உரிய வேளைக்கு கிடைக்காமையினாலுமே உயிரிழப்புகள் அதிகரிக்க நேரிட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## பரந்தன் மக்கள் நிலையென்ன?

இதேவேளையில் கடந்த மாதம் 24ம் திகதி கிளிநொச்சி மாவட்டத்தில் 72 மணித்தியால ஊரடங்கு வேளையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது பரந்தன் பகுதியில் சிக்குண்ட பொதுமக்களின் நிலையென்ன என்பது குறித்து இது வரையும் தகவல்கள் எதுவும் இல்லையென்றும் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரந்தன் பகுதியில் தொடர்ந்தும் இராணுவத்தினர் நிலைகொண்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதனால் இப் பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று நிலைமைகளை அவதானிக்கவோ அல்லது மீட்பு வேலைகளை மேற்கொள்ளவோ முடியாமலுள்ளது என்று கிளிநொச்சி அபிவிருத்தி அகதிகள் புனர்வாழ்வு கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

## சொத்து நாசம்

இதேவேளையில் கிளிநொச்சியில் கடைசியாக நடந்து முடிந்த பாரிய இராணுவ நடவடிக்கையின் போது பரந்தனிலிருந்து கிளிநொச்சி வரையிலான யாழ். கண்டி வீதியின் இரு மருங்கிலும் உள்ள சகல அரச தனியார் கட்டிடங்கள் கடைகள் வீடுகள் என்பன கடும் தாக்குதலுக்குள்ளாகி பலத்த சேதமடைந்துள்ளதாகவும் இதனால் கோடிக் கணக்கான ரூபா பெறுமதியான சொத்துக்கள் நாசமாகியுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்ட கச்சேரி மாவட்ட வைத்தியசாலை, கிளிநொச்சி பிரதேச சபை கட்டிடம், பட்டின சபை அலுவலகம், நூலகம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம், பொலிஸ் நிலையம், சமநலசேவை நிலையம் மற்றும் கிளிநொச்சி சந்தைபகுதியின் 240 வியாபார நிலையப் பகுதிகள் அதனைச் சூழ்ந்த பகுதி, என்பனவும் மிக மோசமான பாதிப்புக்குள்ளாகியுள்ளதுடன் பல கட்டிடங்கள் தீக்கிரையாக்கப்பட்டும் நாசமாக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். புகையிரத நிலையமும் சேதமடைந்துள்ளது.

## வீடுகள் தீக்கிரை

கிளிநொச்சி, பரந்தன் பகுதிகள் மட்டுமல்லாமல், கரடிப்போக்கு, பரவிப்பாஞ்சான் பகுதிகளிலும் பெறுமதிமிக்க கட்டிடங்கள் வீடுகள் என்பன நாசமாக்கப்பட்டுள்ளதாகவும் 60க்கும் மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## நெற்செய்கை பாதிப்பு:

கிளிநொச்சி நீர்ப்பாசன குளத்தின் 4ம், 5ம், 6ம், 7ம், 8ம், 9ம், 10ம் வாய்க்கால்களுக்கு நீர் திறந்து விடப்படும் (சுலிசு) நீர்ப்பாசன வாய்க்கல் கதவு கட்டு (கட்டிடம்) பொம்பர் தாக்குதலினால் (கடந்த 24ஆம் திகதி) சேதமாக்கப்பட்டதையடுத்து குளத்தில் சேமித்து வைக்கப்பட்டிருந்த நீரின் பெரும்பகுதி வெளியேறி வயல்களில் தேவைக்கதிகமாக நிறைந்துள்ளது. இதனால், சிவநகர், குமரபுரம், பரந்தன் மற்றும் 3ஆம், 4ஆம் வாய்க்கால் ஆகிய பகுதிகளில் 13 ஆயிரம் ஏக்கர் சிறுபோக நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

## விவசாயம் பாதிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறை 17ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டதில் 13ஆயிரம் ஏக்கர் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதனால், இப் பகுதி விவசாயிகள் விவசாயத்திலும் பெரும் நட்டம் அடைய நேரிடலாம் என அதிகாரிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

மேலும் கிளிநொச்சி நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் இம்முறை விவசாயிகள் சிறு பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் இப்பகுதியின் கால்நடைகள் அடுத்தடுத்த மாதங்களில் நிலவும் பருவகால வரட்சியின்போது குடிக்க நீரின்றி அழியும் அபாயமும், திறந்த ஆழ் கிணறுகளின் நீரூற்றுக்கள் விரைவில் வரட்சியடைந்து குடிநீர் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய அபாயமும் ஏற்பட்டுள்ளது.

## கால் நடைகள் மடிந்தன

கிளிநொச்சி - பரந்தன் பகுதிகளில் இடம்பெற்ற பாரிய இராணுவ நடவடிக்கைகளில் பொம்பர் தாக்குதல்களினால், பெருந்தொகையான கால்நடைகள் மடிந்துள்ளன. மந்தைக் கூட்டங்கள் மீது குண்டுகள் வீழ்ந்ததனாலும் குண்டுத் தாக்குதல்களினால் ஏற்பட்ட அதிர்ச்சியினாலும் குவியல் குவியலாக இருநூறு தொடக்கம் முன்னூறு வரையிலான மாடுகள் இவ்வாறு பரவலாக இறந்து கிடப்பதாகவும் எங்கும் துர்நாற்றம் வீசுவதாகவும், தாக்குதல்கள் நடைபெற்ற இடங்களுக்குச் சென்று திரும்பியவர்கள் தெரிவித்தார்கள்.

EPIC
Boite-No—69
7,Rue-Raci
95140,Garges
FRANCE.

வெளியீடு
ஈழ மக்கள் செய்தி தொடர்பு நிலையம்
(பிரான்சு)

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்